ரூபாய் செலவாகிறது. இந்தத் திட்டத்திலே பயன்பெற விரும்புகின்ற விவசாயி முதலாண்டு 10 ஆயிரம் ரூபாய் செலுத்தினால் போதும். தொடர்ந்து அவர்கள் 10 ஆண்டுகளுக்கு, ஆண்டுக்கு ஆயிரம் ரூபாய் செலுத்தினால் இந்த இயந்திரம் அவர்களுக்கு முழுமையாகச் சொந்தமாக்கப்படும். எனவே, இந்த சீரிய திட்டத்தை இந்த நடப்பு ஆண்டிலே செயல்படுத்துவதற்கு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை வழங்கி இருக்கிறார்கள் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 112, திரு. கி. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

112-

பட்டுக்கோட்டையை தொழில் வளர்ச்சி மிக்க நகரமாக்குதல்.

* 9766—**திரு. கி. பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டையை, ஒரு தொழில் வளர்ச்சி மிக்க நகரமாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு.ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பட்டுக்கோட்டையில் தொழில் வளர்ச்சி மையம் துவங்க அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை. ஆனால் பட்டுக்கோட்டை வட்டம் தொழில் வளர்ச்சியில் மிகுந்த பின்தங்கிய வட்டமாக, i.e., industrially most backward taluk என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தனியார் துவங்க முன்வந்தால் மிகவும் பின்தங்கிய வட்டங்களுக்கான விற்பனை வரிச் சலுகை, முதலீட்டு மானியம், மின் கட்டணச் சலுகை போன்ற சலுகைகளை அரசு வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் பட்டுக்கோட்டையை தொழில் மையமாக அமைப்பதற்கு எதுவும் சாத்தியக்கூறு இல்லை என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னபோதிலும், தனியார்கள் முன் வந்தால் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும், அதற்கு நல்ல சலுகைகள் தரப்படும் என்றும் சொன்னார்கள். மிக்க நன்றி. பட்டுக்கோட்டை நகரிலே தனியார் ஒருவர்

1994 மார்ச் 28]

40 கோடி ரூபாய் முதலீட்டில் டிட்கோ நிறுவனத்தோடு கூட்டுத் துறையில் சேர்ந்து வீடியோ காசெட் தயாரித்து, 100% எக்ஸ்போர்ட் செய்யக்கூடிய வகையிலே தொழில் துவங்க முன் வந்து இருக்கின்றார். அதற்கு வேண்டிய நிலங்களை ஒதுக்கித் தருமாறு கேட்டுக்கொண்டதற்கு இணங்க, அரசு இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிய வருகிறது. அவர்களுக்கு இந்தச் சலுகைகளை வழங்கி, அந்த நிலத்தைக் கொடுத்தார்களானால், அந்தத் தொழிற்சாலையைத் தொடங்க மிகவும் வசதியாக இருக்கும். ஆகையினால் தனியார் முன் வரவில்லை என்று சொல்வதற்கே இடம் இல்லை. நிச்சயமாக அவர்கள் வருவதற்குத் தயாராக இருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தத் தொழில் வளர்ச்சியைப் பற்றி என்னிடத்திலே அவர்கள் கோரிக்கையாகக் கொடுத்து இருக்கின்றார்கள். அதற்குண்டான கோப்பு இன்னும் வரவில்லை. வந்தவுடன் உடனடியாக அனுமதி வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அந்தத் தொழிலுக்கும் மற்ற தொழில்களுக்கும் பட்டுக்கோட்டையைப் பொறுத்தவரை, நிலத்தைக் கையகப்படுத்திக் கொடுக்கிற வருவாய்த் துறை, நிதி வழங்குகிற நிதித் துறை ஆகிய இரண்டு துறைகளுக்கும் பொறுப்பு ஏற்றிருக்கிற மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பட்டுக்கோட்டை மண்ணிலே அவதரித்தவர்கள். ஆகவே, அவர்களைப் பயன்படுத்தி, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து, பட்டுக்கோட்டையைத் தொழில் கோட்டையாக ஆக்குவதற்கு, பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10-45

திரு. கி. பாலசுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொல்லிய பதிலுக்கு மிகவும் நன்றி. நான் வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொண்டுதான் இருக்கிறேன். அதற்கு அரசின் ஒத்துழைப்புத் தேவை என்பதை மீண்டும் வலியுறுத்திச் சொல்லிக்கொள்கிறேன். இந்த முயற்சி எடுத்துக்கொண்டதன்பேரில் மற்ற அமைச்சர்களும் சேர்ந்து அந்த நிலத்தை சி.வி.சி.ஐ. லிமிடெட் என்ற கம்பெனியாருக்கு ஒதுக்கித் தருமாறு உதவி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்ற அமைச்சர்கள் இரண்டு பேர்களையும் சரி செய்வது அவர் வேலை. (சிரிப்பு) நீங்கள் அதற்கு உதவிகரமாகச் செய்து கொடுப்பீர்களா என்று கேட்கிறார்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அவர் தொழில் துறை அமைச்சரை நம்ப மாட்டார் என்பதற்காகத்தான் நான் நிதித் துறை அமைச்சரையும், வருவாய்த் துறை அமைச்சரையும் சாட்சியாக வைத்திருக்கிறேன். ஆகவே நாங்கள் மூவரும் சேர்ந்து, பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையை முழுமையாக நிறைவேற்றித் தருவோம். ஆனால், பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கோட்டை விட்டு விடக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 113, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

113-

தருமபுரி மாவட்டம், மாடப்பள்ளியில் கிரானைட் தொழிற்கூடங்கள் உற்பத்தியைத் தொடங்குதல்

* 15239—**திரு. சி. இராமசுவாமி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பர்கூர் அருகில் உள்ள மாடப்பள்ளியில் அமைக்கப்பட இருக்கும் கிரானைட் தொழிற்கூடங்கள் எந்த ஆண்டு முடிக்கப்பட்டு, உற்பத்தியைத் தொடங்கும் ?

(ஆ) இதனால் வேலைவாய்ப்பு பெறுவோர் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) தருமபுரி மாவட்டம் பர்கூர் அருகில் உள்ள மாடப்பள்ளியில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் 21-8-1991 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்ட கிரானைட் தொழிற்சாலை, 1993 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் உற்பத்தியைத் தொடங்கியது.

(ஆ) இந்தத் தொழிற்சாலை முழு அளவில் இயங்கும்போது சுமார் 84 பேர் வேலைவாய்ப்பைப் பெறுவார்கள். தற்போது 46 நபர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களில் 7 பேர் தொழில் நுட்ப அலுவலர்கள்: 3 பேர் நிர்வாகப் பிரிவு அலுவலர்கள்; 32 பேர் தொழிற்சாலை ஆப்பரேட்டர்கள்; 4 பேர் காவலர்கள். இது தவிர சுமார் 100 பேர் மறைமுகமாக வேலைவாய்ப்பைப் பெற்று வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிரானைட் தொழிற்கூடங்களில் பணி புரிய பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS